*Thol seer samookaviyal sinthanaiyalar (Tamil)*
*Classic thinkers of Sociology*

Author : ***Dr.N.Shanmugalingan***


© : ***Mrs. Gowri Shanmugalingan***

First Edition : ***5.5.2002***

Published by : ***Sociological Society,***
***University of Jaffna.***

Printed at : ***HariKanan Printers, Jaffna.***

Price : 250/=



என்னை எனக்கறிவித்து
எங்கள் புலமை மரபின் கைலாசமாய்
என்றும் வழிகாட்டும்
எங்கள் பேராசிரியர் க. கைலாசபதி
அவர்களின்
அழியா நினைவுகளுக்கு

**யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர்**

**பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் வழங்கிய**

# அணிந்துரை

19ம் நூற்றாண்டிலும், 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதிகளிலும் உலகம் எதிர்கொண்ட புதிய சூழலில் சமூகவிய லென்ற அறிவுத்துறையின் மலர்ச்சியைக் காண்கின்றோம். பிரான் சியப்புரட்சி, தொழிற்புரட்சி, சோசலிசத்தின் எழுச்சி, நகர மயமாக கம் என இக் காலத்து ஏற்பட்ட மாற்றங்கள் சமூக வாழ்வில் பாரிய தாக்கங்களை விளைவித்தன. ஏற்கனவே நிலைபெற்றிருந்த வாழ்வும், விழுமியங்களும் கேள்விக்குள்ளாகின. இந்நிலையில் சமூகத்தினை விளங்கவும் அதனை மேம்பாடான முறையில் வடிவமைக்கவும் புதிய அறிவு இன்றியமையாததாக இருந்தது. இந்த வகையில் தோற்றம் பெற்ற சமூகவியல் சிந்தனை மரபானது இன்றுவரை மிகமுக்கியமானதோர் அறிவுப் புலமாக எங்கணும் வியாபித்துள்ளது.

தமிழில் சமூகவியற்கல்வியை நிலைநாட்டி அந்த அறிவின் பயன்களை எம்மவற்கு தருதற்கான முயற்சிகள் மூன்று தசாப்தங் களிற்கு மேல் கைகூடாமலேயே இருந்து வந்தன. எனினும் தொண்ணூறுகளின் தொடக்கத்தில் எங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிறப்புக்கலை கற்கை நெறியாக சமூகவியல் கல்வி தூரதரிசனத்துடனும், நிறைந்த அர்ப்பணிப் புடனும் தொடங்கப்பட்டு நிறைவாக தொடரப்படுகின்றது. இந்தப் பணிகளில் தலைமகனாய் பொறுப்பை ஏற்று இன்று அத்துறையின் முதற்தலைவராயும் பணிதொடர்பவர் கலாநிதி என். சண்முகலிங்கன். பல சர்வதேச ஆய்வரங்குகள், புலமையாளர் களுடனான ஊடாட்டங்களின் வழி தமது அறிவையும் வளம படுத்தி துறையினையும் மேம்படுத்தி வருபவர் சண்முகலிங்கன்.

அண்மையில் புகழ்பெற்ற டெல்கி, காலிங்கா பிரசுர நிறுவனத்தின் வெளியீடாக அவரது கலாநிதிப்பட்ட ஆய்வு நூலான **A New Face of Durga** வெளியாகி எமக்கெல்லாம் பெருமை சேர்த்துள்ளது. புதிய நூலான **தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர்** தமிழில் இப்பொழுதுவெளியாகின்றது. 'தமிழை அறிவியல் மொழியாக்கவேண்டும்' என எங்கள் கல்விசார் அரங்குகளில் அடிக்கடி வலியுறுத்தும் கலாநிதி என். சண்முகலிங்கனின் கருத்து நிலைக்கு வடிவம் தருவதாக இந்த புதிய நூல் அழகாக தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளரின் வாழ்வையும் பணிகளையும் விரிவாக எடுத்தியம்புகின்றது. 'சண்'னின் தெளிந்த சிந்தையும் தொடர்பியல் வல்லமையும் இவரது ஏனைய ஆக்கங்களைப் போன்றே இந்நூலிலும் பளிச்சிடுகின்றது.

மென்மேலும் இவர் புதிய பல அறிவு நூல்களை தமிழுக்கு, அறிவுலகுக்குத்தர என்றென்றும் என் அன்பான வாழ்த்துக்கள்.

*பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை*
*துணைவேந்தர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*திருநெல்வேலி*
*யாழ்ப்பாணம்.*

# பொருளடக்கம்


| | |
|---|---|
| *தொல்சீர் சிந்தனை மரபு* | 01 |
| *அகஸ்ற் கொம்ற் - August Comte* | 07 |
| *ஹேர்பேட் ஸ்பென்சர் - Herbert Spencer* | 31 |
| *கார்ல் மார்க்ஸ் - Karl Marx* | 39 |
| *எமில் டுர்கைம் - Emile Durkheim* | 60 |
| *மக்ஸ் வெபர் - Max Weber* | 86 |
| *தொல்சீர் சிந்தனையாளரின் தேர்ந்த நூற்பட்டியல்* | 122 |


# தொல்சீர் மரபு - அறிமுகம்

சமூகம் பற்றிய கோட்பாடுகளின் தோற்றப்புள்ளிகள் தொன்மை யானவையெனினும், விஞ்ஞான விசாரணையின் வழியான கோட்பாடுகளின் தொடக்கம் என்பது சமூகவியலுடன் மிக அண்மைக்காலத்துத்தான் கைவசமாகும்.

சமூகம் தொடர்பான முறையியல் வழிப்பட்ட கற்கை நெறியாக **Sociology** எனும் பதத்தினை 1822ல் அகஸ்ற் கொம்ற் (Auguste comte, 1798-1857) அறிமுகம் செய்தார். கொம்ற்ரின் சிந்தனைத்தடத்திலே ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்னைய மொன்ரெஸ்கியூ (Montesquieu,1689-1755) முதலாய அறிவொளிக்கால மெய்யியலாளர்களின் செல்வாக்கினைக் காண முடியும். கூடவே தனிமனித சுதந்திரம், மானுட முழுமை, சமூக முன்னேற்றம் என்பவை தொடர்பான நம்பிக்கைச் சிந்தனையாளர்களான வால்டேயர் (Voltaire, 1674-1778), ரூசோ (Rousseau, 1712-1778) போன்றோரின் அறிவனுபவங்களும் சமூகவியல் கோட்பாட்டிலே உள்வாங்கப்பட்டமையையும் உணர முடியும்.

மொன்டெஸ்கியூவின் **Persian letters,** 1721ல் நூல்வடிவம் பெற்றது. அக்கால பிரெஞ்சு சமூகத்தின் பழக்க வழக்கங்களை சமூகவியல் நோக்கில் வெளிப்படுத்தும் கடித வடிவிலான ஆய்வு இலக்கியமாக இது அமைந்திருந்தது. இவரின் மற்றொரு பிரபலமான நூலான **The spirit of the laws,** 1728ல் வெளியானது. ஒரு பண்பாட்டுப் புலத்து மக்கள் எவ்வாறு தமது புவியியற் சூழலினால் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்பதனை

இந்நூல் விளக்கியது. சட்டங்களும் வழமைகளும் அரசாங்க வடிவங்களும் இயல்பான பொருண்மைகள் அல்ல; வாழும் சூழ்நிலைகளினால் தீர்மானிக்கப்படுபவை என்பதனையும் தெளிவாக்கியது.

சமூக ஒழுங்கு, வகுப்புக்கள் இடையிலான அசமத்துவம், முடியாட்சியின் மேலாதிக்கம் என்பன தெய்வ அநுக்கிரகத்தின் வழியானவை; மாற்றவியலாத உண்மைகள் எனும் நம்பிக்கைகள் புதிய சிந்தனைச்சூழலில் வலுவிழந்தன. **மனித உரிமை களினடியான ஜனநாயக ஒழுங்கு** எனும் சமூகவியல் சிந்தனை, புதுவரவாகும்.

இரண்டு வகையான அசமத்துவ நிலைமைகளை ரூசோவின் எழுத்துக்கள் வெளிப்படுத்தின. இயற்கையான பௌதீக அடிப்படையிலான அசமத்துவம், ஒழுக்க நிலைப்பட்ட அல்லது அரசியல் சார்ந்த அசமத்துவம் என வேறுபடுத்திய ரூசோவின் கருத்துநிலை மேலும் புதிய தேடல்களுக்கு வழிசமைத்தது.

இக்காலத்து முதன்மை பெற்ற மற்றொரு சிந்தனை யாளரான கொண்டோசற் (Condorcet) ஒரு கணிதவியலாளர். இயற்கை விஞ்ஞான விதிகளைப் பயன்படுத்தினால் சமூக விஞ்ஞானம் விரைந்து வளர்ச்சி காணும் என்பது இவரது கருத்துநிலை முன்வைப்பாகும். இதன் வழி மனித முழுமையும், நீதியான சமூக வாழ்வும் உறுதி பெறும் என்பதும் இவரது நம்பிக்கையாகும். பெண்களுக்கு சமஉரிமை, அடிமைநிலை ஒழிப்பு, அனைவருக்கும் வாக்குரிமை, கருத்துச் சுதந்திரம் எனும் புதிய விழுமியங்கள் இதன் வழி முதன்மை பெற்றன. அரசும் திருச்சபையும் வெவ்வேறாக்கப்படவேண்டும்; பல்வேறு சமூகநல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற கருத்தும்



கூடவே இவரால் முன்வைக்கப்பட்டது.

இந்த கருத்து நிலை தளத்தில் தான் பிரான்சிய புரட்சி செயல்வடிவம் கண்டது.

- பகுத்தறிவினடியான சட்டவாக்கம்; அதன் வழியான புதிய சமூக ஒழுங்கு.
- மக்களின் சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டு வாழ்வில் புதிய உருமாற்றங்கள்.
- முடியாட்சிக்கு முடிவு
- கல்வியமைப்பில் சீர்திருத்தங்கள்; மையப்படுத்தல்கள்
- மேற்கண்ட புரட்சிகர மாற்றங்களினடியாக சமூக நிறுவனங்களை தனியன்களின் உரிமைக்களுக்கான தாக்குதல்

எனும் புதிய இக் கருத்தியல் சூழலில்தான் சமூகவியலின் பிறப்பு சாத்தியமானது.

19ம் நூற்றாண்டிலும், 20ம் நூற்றாண்டின் தொடக்க காலப்பகுதியிலும் மேலைநாடுகள் பலவற்றிலும் எழுச்சி கண்ட தொழிற்புரட்சியும் சமூகவியலின் உருவாக்கத்தில் மிக முக்கியமான பங்கினை வகித்தது. தொழிற்புரட்சி என்பது ஒரு தனி நிகழ்வு அல்ல; பல ஒன்றிணைந்த மேம்பாட்டு நிலைமைகள் - சமூக உருமாற்றங்களுக்கு அது வழிவகுத்தது பெரும் எண்ணிக்கையான பண்ணை விவசாயிகள் தம் விவசாயப் புலங்களை விட்டு தொழிற்சாலைகளை நாடி புறப்பட்டனர். தொழிற்சாலைகளும் பல புதிய தொழிநுட்ப மேம்பாடுகளைக் கண்டன முதலாளித்துவ பொருளாதாரம் பல சேவைத் தொழிலாளரை உருவாக்கியது. சிலரிடம் இலாபம் குவிந்தது பலர் நீண்ட மணிநேரம் வேலைசெய்தும் குறைந்தளவு கூலியையே பெற முடிந்தது. விளைவாக தொழிற் சங்க அமைப்புக்களும், வேறுபட்ட புரட்சிகர அமைப்புக்களும் தோற்றம் பெற்றன.

தொழிற்புரட்சி, முதலாளித்துவம், புரட்சிகர எதிர்வினைகள் என்ற இந்த மேலைச் சூழல்களின் பின்னணியிலேயே தொல்சீர் சமூகவியலாளர்களின் தோற்றத்தினையும் சிந்தனை விரிவையும் சந்திக்கின்றோம். முதலாளித்துவ பொருளாதார அமைப்பு தந்த மனித துயரங்கள், தொழிற்புரட்சியின் விளைவான நகரமயமாக்கல், நகரமயமாக்கத்தில் தம் வாழ்வினை இசைவாக்கம் காண்பதில் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள், புதிய புரட்சிகர சூழலில் இது வரை முதன்மை கண்ட சமய கருத்தியல்கள் கண்ட மாற்றங்கள் என்பன இச் சிந்தனையாளரின் குவிமையங்களாகின. இந்த வகையில் தான் நவீன சமூகவியலின் தந்தையென அழைக்கப்படும் அகஸ்ற் கொம்ற்(August Comte), கார்ல் மார்க்ஸ் (Karl Marx), மக்ஸ் வெபர் (Max Weber), எமில் டுர்கைம் (Emile Durkheim) ஆகியோர் அடிப்படை தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர்களாக கவனம் பெறுகின்றார்கள்.

ஊகநிலைப்பட்ட ஒழுக்க மெய்யியல் சிந்தனை மரபினின்றும் வேறுபட்ட சமூகம் பற்றிய விஞ்ஞான கல்வியாளர்களாக தொல்சீர் சிந்தனையாளர் தம்மை வெளிப்படுத்தினர். அனைத்து தொல்சீர் சிந்தனையாளர்களையும் இணைக்கும் களமும் இதுதான். தமது இந்த இலக்கினை முழுமையாக எய்துவதில் அக-புற தடைகளை இவர்கள் சந்திக்க நேர்ந்தமையும் இங்கு கவனத்திற்குரியது. புதிய இலக்குப்பற்றிய தெளிவிடையும் முன்னை ஒழுக்க நிலைப்பட்ட கருத்தாக்கங்களை முற்றாக இவர்களால் விட்டுவிட முடியவில்லை. எனினும் நவீனமயமாக்கல் விசைகள் பற்றியும், மனித சூழலில் அவற்றின் தாக்கங்கள் பற்றியும் இவர்கள் மேற்கொண்ட நம்பகமான பகுப்பாய்வின் வழி சமூகம் பற்றிய அறிவியலை கண்ட பெருமையை தேடிக் கொண்டார்கள்.



தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர் குழாத்தின் ஆக்கங்கள் ஓரேகுரலில் பேசுபவையல்ல; இவர்களிடை ஒரு பொதுமையைக் காண்பது இலகுவானது அல்ல.

எனினும்

- மானுட முன்னேற்றம் தொடர்பான இவர்களது நம்பிக்கை என்ன?
- விஞ்ஞானமென்பது மனிதனுக்கு வாய்த்த இணையிலா வரப்பிரசாதம் என இவர்கள் கருதுகின்றனரா?
- மனித பகுத்தறிவென்பது நீதியான, மனிதத்தன்மை கொண்ட சமூகத்திற்கு வழிசமைக்குமா? அல்லது
- விஞ்ஞான யுகத்தில் புதிய வடிவிலான மேலாண்மைகள் எழுமா?

என்கின்ற அடிப்படை வினாக்களுக்கான விடைகளின் வழி இவர்களின் கருத்துநிலை, முறையியல் வேறுபாடுகளை நாம் தெளிந்திட முடியும்.

அனுபவங்களினடியான ஆதாரங்களை வலியுறுத்துபவர், வரலாற்றுப் பகுப்பாய்வை முதன்மைப்படுத்துபவர், ஆதாரங்களுடன் பகுத்தறிவு தர்க்கங்களை முன்வைப்பவர் என இவர்களது அணுகுமுறைகளிடை நாம் வேறுபாடுகளைக் காணமுடியும். அவ்வாறே சமூகத்தை முழுமையாக காணவேண்டும் என்பதில் இருந்து, சமூகத்தின் அங்கங்களான தனிமனித அலகுகளை படிக்கவேண்டும் என்பதான வேறுபாடுகளையும் இச்சிந்தனையாளர்களிடை அவதானிக்கலாம். சமூகத்தின் ஒழுங்கே இலக்கு எனும் சிந்தனைக்குழுமம் ஒருபுறமாக, முரண்பாடு இயல்பானது; சமூகம் இயங்கியல் தன்மையது, முரண்வழிதான் சமூகநீதியும் மனித மேம்பாடும் எய்தப்படும் எனும் சமூக மாற்ற சிந்தனைக்குழுமம் மறுபுறமாகும். தொல்சீர் சிந்தனை மரபு முதல் இன்றைய

எல்லாமே இயல்பாகவே நடக்கின்றன. வன்முறைச் சமூக அமைப்பில் தனியன்களுக்கான உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படும். ஆனால் தொழில் சமூக நிலையில் தனியுரிமைகளோடு மனிதர்கள் சுதந்திரமாய் வாழ்வார்கள்.

ஸ்பென்சருடைய இவ்வகைப்பாடானது கட்டற்ற பொருளாதாரத்தை நியாயப்படுத்தி, அதன்வழி அக்காலத்து நிலவிய முதலாளித்துவ சமூகத்திற்கு ஏற்படக்கூடிய கருத்துக் களின் பாதிப்புக்களினின்றும் அவ்வமைப்பை காக்கும் நோக்கி லானது எனும் விமர்சனங்கள் மார்க்சிய சிந்தனையாளர்களினால் முன்வைக்கப்படுவதும் இங்கு கவனத்திற்குரியது.


ஸ்பென்சருடைய கோட்பாடுகள் வெறும் மெய்யியல் விசாரங்களாகவே அமைந்தன என விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன. அறிவியல் நிலையில் தம் சிந்தனைகளை மேலும் தெளிவாகத் தருவதன் மூலம் புறமெய்மைசார் சமூகவியலுக்கு சிறப்பான முறையில் பங்களித்திருக்கலாம் எனவும் இவ்விமர்சனங் கள் கூறுகின்றன ▩



# 3

# கார்ல் மார்க்ஸ்
# Karl Marx
## 1818-1883

### வாழ்வும் காலமும்



சிந்தனையாளர் வட்டத்தில் கார்ல் மார்க்ஸ் அளவுக்கு அதிகளவு எண்ணிக்கை யானோரை பின்பற்றுவோராகக் கொண்டோர் எவரும் இல்லையெனலாம். வரலாற்றின் தடத் திலே கோடிக்கணக்கான உழைக்கும் மக்களா லும் புலமையாளர்களினாலும் விஞ்ஞான சோசலிசத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் கார்ல் மாக்ஸ்.

பெருசியாவின் ரிவெஸ் பிரதேசத்தில் ஒரு யூதக் குடும்பத்தில் 1818ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி மார்க்ஸ் பிறந்தார். கிறிஸ்தவசமய ஞானஸ்னானம் பெற்றபோதும் சமயத்தினதோ இனத்தினதோ செல்வாக்கிற்கு உள்ளாகாம லேயே வளர்ந்தார். உள்ளூரிலிருந்த உயர் இலக்கணப் பள்ளியில் ஆரம்பக்கல்வியை பெற்ற பின் பொன், பேர்லின் பல்கலைக்கழக கத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். பேர்லின் பல்கலைக் கழகத்தில் இளைய ஹெகலியன் கோட்பாட்டாளருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார். ஹெகலிய இயங்கியலை மனித சமூகத்தின் பொருள்சார் கோட்பாட்டிற்கு பொருத்தமானதாக்கும் ஆய்வுப்பணியை இங்கேதான் மேற்கொண்டார்.

1841ல் ஜெனா பல்கலைக்கழகத்தில் இயற்கை மெய்யியல் தொடர்பான ஆய்வுக்கென கலாநிதிப்பட்டம் இவருக்கு

நீதியமைப்புக்களிடம் என மாற்றங்காண்பதினைச் சுட்டுகிறார். அரசியல் அதிகார விருத்தியிலும் தர்க்க ரீதியான சட்டவழி ஆட்சி மாற்றங்களை இனங்காட்டுகிறார். இசை கூட இதற்கு விதிவிலக்காகவில்லை. ஆதி இசை புலத்தின் இயல்பான ஆற்றொழுக்கான எழுச்சி நிலைமை புதிய சிம்பனி கூட்டிசைவில் திட்டமிட்ட கடுமையான விதிகளுக்குட்படுவதையும் எடுத்துக் காட்டுகிறார்.

**சமயமும் பொருளாதாரமும்**



நன்றி: **North wind Picture Archive.**

புரட்டஸ்தாந்து அற ஒழுக்கமும் முதலாளித்துவத்தின் எழுச்சியும் தொடர்பான வெபரின் கட்டுரையிலே சமய நம்பிக்கைகளை சமூக நிறுவனங்களுடன் தொடர்புபடுத்துகிறார் வெபர். ஒத்திசைவு, வேறுபாடு என்ற இரண்டு முக்கியமான நோக்குகளில் தன் பகுப்பாய்வுகளை மேற்கொண்டார் வெபர்.



முதலாளித்துவம் வளர்ச்சி காண்பதற்கு மக்களிடதுக் கொண்ட இசைவான பண்பாட்டுக் கூறுகள் அவசியமாகும். புரட்டஸ்தாந்து சமயம் குறிப்பாக கல்வினிசம் *செய்யும் தொழிலே தெய்வம்* என்பதான கருத்தியலை முன்வைத்தபோது அது இலகுவாக மக்களிடத்து செல்வாக்குச் செலுத்தியது.

கத்தோலிக்க சமயத்தினரை விட செழிப்பான பொருளாதார வாழ்வில் புரட்டஸ்தாந்து சமயத்தினர் காணப்படுவதற்கு இதனையே அடிப்படையாக கூறுவர் வெபர். வேறுபாடு தொடர்பான வெபரின் கோட்பாடுக்கு ஆதாரமாகவும் முதலாளித்துவம் வேகமாக வளர்ச்சி கண்ட புரட்டஸ்தாந்து நாடுகளையே எடுத்துக்காட்டாக காட்டுவார் வெபர். தனது ஆய்வினை தெளிவாக்குதற்காக உலக சமயங்கள் பலவற்றினை ஒப்பியல் பகுப்பாய்வாக நோக்குவார் வெபர். இந்த வகையில் யூதாயிசம், கொன்பியூசனிசம், இந்து சமயம் ஆகியன முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தடையாக அமைந்ததையும் தன் ஆய்விடை எடுத்து விளக்குவார் வெபர். பொருளாதார நடத்தையினை தீர்மானிக்கும் சமய நம்பிக்கைகள் பற்றி வெபர் அதிகளவு அழுத்தம் கொடுத்து விட்டார் என்பதான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதும். சமயத்தின் சமூகவியலில் வெபரின் கருத்தாக்கம் இன்னமும் செல்வாக்குச் செலுத்தக் காணலாம் ▫



கலாநிதி என். சண்முகலிங்கன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் - சமூகவியல் துறையின் ஸ்தாபக தலைவர். தமிழில் சமூகவியலை எழுதும் முதன்மைப் புலமையாளர்.

சமயத்தின் சமூகவியல், சமூக மேம்பாடும் பண்பாடும், தொடர்பியல் - இவரது சிறப்பு ஆய்வார்வங்கள். பல சர்வதேச ஆய்வரங்குகளில், ஆய்வு நூற்தொகுப்புக்களில் இவரது கட்டுரைகள் இடம் பிடித்துள்ளன. பண்பாட்டு மேம்பாடு தொடர்பான இவரது அண்மைய நூல்களான சமூக மாற்றத்தில் பண்பாடு (2000), மரபுகளும் மாற்றங்களும் (2001) தமிழ் சிந்தனை மரபிற்கு வளம் சேர்ப்பன. புகழ் பெற்ற மானுடவியலாளரான பேராசிரியர் கணநாத் ஒபயசேகர அவர்களின் வழிகாட்டலில் உருவான இவரின் கலாநிதிப்பட்ட ஆய்வேடு, **A New face of Durga : Religious and Social change in Sri Lanka**, இவ்வாண்டில் டெல்கி காலிங்கா வெளியீடாகி, உலக சமூகவியல் புலத்தில் தடம்பதித்துள்ளது.

தன் கல்விசார் செயற்பாடுகளுக்கப்பால் ஆக்க இலக்கிய, கலைப் படைப்புக்களின் வழியும் நன்கு அறியப்படுபவர் கலாநிதி சண்முகலிங்கன். இவரது கவிதை நூலான நாகரிகத்தின் நிறம் (1993), சாஹித்திய விருது பெற்றது. சிறுவர் நாவலான சான்றோன் எனக் கேட்ட தாய் (1993) யுனஸ்கோ பரிசு பெற்றது. இவரது ஆக்கஇசை நிகழ்ச்சிகளான கண்ணீரைத் துடைத்துக்கொள் (1990), உயிரின் குரல் (1994), மானஸி (1997) என்பன ஈழத்து சமூகத் தொடர்பாடலில் குறிப்பான கவனத்தைப் பெறுகின்றன. மட்டக்களப்பில் அம்மன் வழிபாடும் சடங்கும் (1999), மண்டூர் முருகன் வழிபாட்டு மரபுகள் (2000) எனும் இவரது காட்சிசார் மானுடவியல் விவரணங்கள் எங்கள் பண்பாட்டு கல்வியில் பெரிதும் துணையாகின்றன.

புதிய நூலான தொல்சீர் சமூகவியல் சிந்தனையாளர், தமிழை அறிவியல் மொழியாக்கும் எங்கள் பணிக்கு மேலும் வலிமை சேர்க்கின்றது.

*பேராசிரியர் அ. சண்முகதாஸ்*
*பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புக்கள் பீடம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

HARIKAHAN PRINTERS, JAFFNA.